


# ஏந்தல் நபியின் ஏவல்கள்

தொகுப்பு:
ஜுபா ஆர். அயூப்

ஷஜா வெளியீடு
43, பழைய மார்க்கெற்,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு
மில்க்வைற் சோப் தொழிற்சாலை

விலை ரூபா. 3-50

## சமர்ப்பணம்

தங்களை உருக்கி எங்களை ஆளாக்கிய
எமது பெற்றோர்களான

ஜனாப். முஹமட் அப்துல் காதர்
ஜனாபா. முஹமட் பாத்திமா

அவர்கட்குச் சமர்ப்பணமாக இந்நூல்
வெளியிடப்பட்டுள்ளது,

# முன்னுரை

அஸ்ஸலாமு அலைக்கும்

"நஹ்மதுல்லாஹ வநுசல்லீ வநுசல்லிமு அலா ரஹீலிஹில் கரீம்"

ஏந்தல் நபியின் ஏவல்கள் சிலவற்றை தாங்கி வெளிவரும் இந்நூல் ஒவ்வொருவர் வாழ்க்கையோடு இணைந்து கடைப்பிடிக்க வேண்டிய ஏற்ற மிகு சிறப்புரைகளை உள்ளடக்கிய தொன்றாகும்

காலச் சூழ்நிலைகளில் சிக்குண்டு கறைபடிந்து போன நெஞ்சங்களை கனிய வைக்கும் அரும் பெருமைகளை எமக்குணர வைத்த ஏந்தல் நபியின் பொன் மொழிகளை நாமும் அறிந்து மற்றவர்களையும் அறியச் செய்வோமாக.

பல்வேறு கிரந்தங்களிலிருந்து தொகுக்கப்பட்ட இந்நூலில் குறைகள் காணப்படுமாயின் அறியத்தரின் எனது அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்ள முடியுமென உறுதி கூறுகிறேன்.

இச்சிறு நூலை எழுத ஆர்வமும் ஊக்கமும் அளித்த எல்லாம் வல்ல அல்லாஹ் விற்கே எல்லாப் புகழும்.

அல்ஹம்துலில்லாஹ்

ஆக்கியோன்

அன்பளிப்பு
மில்க் வைற் சோப் தொழிற்
யாழ்ப்பாணம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்

1. ஆதமுடைய மகன் செய்யும் எல்லா நற்செயல்களும் ஒன்றுக்குப் பத்திலிருந்து எழுநூறுவரை பிரதிபலன் இரட்டிப்புச் செய்யப்படுகின்றன. ஆனால் நோன்பை மாத்திரம் தவிர ஏனெனில் அது எனக்குச் சொந்தம். 'நானே அதற்குக் கூலி கொடுப்பேன்' என்று அல்லாஹ் கூறுகிறான்.

2. என்னுடைய உம்மத்வர்களில் மிகச் சிறப்புடையோர். திருக்குர்ஆனை தங்களுடைய இதயங்களில் சுமந்து அதனை ஓதி அதன்படிச் செயல்ப்படுகின்றவர்களும், இரவு வணக்கத்தை உடையோரும் ஆகும்.

3. ஒருவருக்கு இன்னொருவர் மீது ஏதாகிலும் ஒரு கடன் இருந்து, உரிய காலத்தில் அவர் அதனைத் திருப்பிக் கொடுக்கத் தவறுமிடத்து அதன் தவணையை அவர் பின் தள்ளி வைப்பாரானால், அதனாலும் ஒவ்வொரு நாளும் தர்மம் கொடுக்கிறவர் போலாகிவிடுகின்றார்.

4. மறுமைநாளன்று நிகழக்கூடிய சகல கஸ்டங்களிலிருந்து அல்லாஹ் ஈடேற்றி வைப்பது யாரை எனில், கடனைப் பெற்று திருப்பித் தரமுடியாதவர்களுக்கு கருணை காட்டுகின்றவராயிருப்பவராவார்.

5. "எவர் (வழியில் விழுந்துவிட்ட) ஏதாவது ஒன்றைக் கண்டெடுத்தால் அதனை ஜனங்களுக்கு அறியத்தரவேண்டும் அப்படிச் செய்யாமல் தமக்குரியதாக ஆக்கிக்கொண்டால் அவர் உண்மையைவிட்டு வழி தவறியவராவார்:

6. தொழுகையைப் பேணி ஒழுங்காக நிறைவேற்றுபவர்கள் சொர்க்கம் புகுகின்றனர்:

7. தொழுகையற்றவர்களுக்கு இஸ்லாத்தில் எவ்விதப் பங்கும் கிடையாது; ஒளுவற்றோருக்குத் தொழுகையில் பங்கு கிடையாது.

8. எனது உம்மத்துக்களின் ஒளு, ஸஜ்தா செய்ததின் காரணத்தினால் அவர்களின் முகங்களிலும், காலங்களிலும் தோன்றும் ஒளியினால் அவர்கள் மறுமை நாளில் பிரித்தறியப்படுவார்கள்.

9. தொழுகையினால் உணவு நெருக்கடி அவரைவிட்டு நீக்கப்படும். கப்றுடைய அதாபு கிடையாது, ஸிராத்துல் முஸ்த

கீம் பாலத்தை அவர் மின்னல் வேகத்தில் கடந்து விடுவார் கேள்வி - கணக்கு கேட்கப்படமாட்டாது.

10. தொழுகையை விட்டவன் மரணமாகும்போது மூன்று விடயங்கள் ஏற்படும்.

1) கேவலமான நிலையில் அவர் இறப்பார் 2) பசியுள்ள நிலையில் இறப்பார் 3) தாகமுள்ள நிலையில் அவர் இறப்பார்.

11. நீங்களறிய எந்தத் தொழுகையையும் விட்டுவிடாதீர்கள் தொழுகையை விட்டவர் நமது மார்க்கத்தை விட்டவராவார்.

12. தொழுகையை விடுவது மனிதனை குப்ரின்பால் சேர்த்து விடுகிறது. ஈமானுக்கும் குப்றுக்குமிடையே தொழுகையை விடுவதே வேறுபாடாகும்.

13. ஒருவர் தம் வீட்டில் தொழும் ஒரு தொழுகை பிரதிபலன் இரட்டிப்பு இன்றிய ஒரு தொழுகையாகவே இருக்கும் அவர் தம் இனத்தவர்களின் (மஹல்லா) மஸ்ஜிதில் தொழும் ஒரு தொழுகை இருபத்தைந்து மடங்கு இரட்டிப்பானதாகும் ஜும்ஆ மஸ்ஜிதில் தொழும் தொழுகையானது ஐநூறு மடங்கு இரட்டிப்பானதாகும் மஸ்ஜிதுல் அக்ஸாவில் அவர் தொழும் ஒரு தொழுகையானது ஐயாயிரம் மடங்கு இரட்டிப்பானதாகும். ம்ஸ்ஜிதுல் ஹறுமில் அவர் தொழும் ஒரு தொழுகை ஒரு லட்சம் மடங்கு இரட்டிப்பானதாகும்.

14. "பாங்கொலிக்குமிடத்து, யுத்தகளத்தில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்குமிடத்து, மழை வருசிக்குமிடத்து கேட்கப்படும் துஆ மறுக்கப்படமாட்டாது"

15. "பாங்கொலிக்கும் இகாமத்திற்குமிடையில் கேட்கப்படும் துஆ மறுக்கப்படமாட்டா"

16. "(ஜமாஅத்துத்) தொழுகை நிலைபடுத்தப்பட்டு விடுமானால் அதற்காக நீங்கள் விரைந்தோடி வரவேண்டாம்! நீங்கள் அமைதியாக சாதாரண நடையில் நடந்து வருவீர்களாக! இமாமுடன் நீங்கள் எந்த நிலையை அடைவீர்களோ அதனை நீங்கள் அவருடன் சேர்த்துத் தொழுதுவிட்டு அவருடன் நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியாமல் போய்விட்ட ரக்அத்துக்களை அவர்ஸலாம் கொடுத்து முடிந்தபின் தனித்துத் தொழுது தொழுகையைப் பூர்த்தி செய்வீர்களாக!"

17. எவருக்கு ஒரு தொழுகை அகாரணமாகத் தவறி விடுகிறதோ அவருக்கு அவரது குடும்பமும் அவரது பொருளும் சூறை யாடப்பட்டது போன்று ஆகிவிடுகிறது.

உங்களில் எவர் தொழுகையில் நின்றுவிட்டால், அவருடைய அவயவங்களை அமைதியாக வைத்துக்கொள்ளவும் யூதர்களைப் போன்று அங்குமிங்கும் அசைந்தாட வேண்டாம்! ஏனெனில் நிச்சயமாக, தொழுகையில் அவயவங்களை அமைதியாக்கிக் கொள்வது தொழுகையை குறைவு இல்லாமல் நிறைவுபடுத் தக்கூடியதாகும்.

18. "திருடுவதில் மனிதர்களில் மிகக் கொடியவர் தம்முடைய தொழுகையைத் திருடுகின்றவரே என்று நாயகம் (ஸல்) கூறியபொழுது தோழர்கள் அன்னுரை நோக்கி "அல்லாஹ் வின் தூதரே! அவர் தொழுகையை எப்படித் திருடுவார் என வினவினுர்கள். அவர் அதன் ருகூவையும் ஸுஜூதையும் பூர ணமாகச் செய்யமாட்டார் என பதில் கூறினுர்கள் நபிநா யகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்.

19. எவர் உணவுப் பொருளை நாற்பது நாள் வரை பதுக்கி வைத் துவிட்டு, பின்னர் அதனை அவர் தானம் செய்து விட்டா லும் கூட அது அவர்பதுக்கிய குற்றத்திற்குப் பரிகாரமாக மாட்டாது.

20. உணவுப் பொருட்களைப்பதுக்கி வைத்து விலையேற்றி விற்போ ரை அல்லாஹ், கருங்குஷ்டம், வறுமை கொண்டு சோதிப் பான்.

21. உணவுப்பொருட்களை நாற்பது நாட்கள் பதுக்கி வைப்போர் அல்லாஹ்வை விட்டு நீங்கியவராவார். மேலும் அல்லாஹ்வும் அவரை விட்டு நீங்கி விடுகிறுன்.

22. நிச்சயமாக, நான் பாவங்களை மன்னித்து விடுவதில் சக்தி யுள்ளவன் என்று என்னுடைய எந்த அடியான் அறிந்தும் தெரிந்தும் கொள்கின்ருனே அவனுக்கு நான் பாவங்களை மன்னித்துவிடுவேன் எனக்கு அவன் இணை வைக்காதிருக் கும் காலம் வரை அவனைப்பற்றி எதனையும் பொருட்படுத்த மாட்டேன் என்று அல்லாஹ் கூறுகிறுன்.

23. "எவர் இவ்வுலகத்தில் இணை எதையும் வைக்காமல் மரண மடைந்து அல்லாஹ்வைச் சந்திப்பாராயின் அவருக்கு அல்

லாஹு பாவமன்னிப்புக் கொடுக்கின்றான். (அவருடைய பாவங்கள் மலை போல் இருப்பினும் சரியே)

24. பாவமன்னிப்புத் தேடுவதை எவர் நிரந்தரமாக ஆக்கிக் கொள்கின்றாரோ அவருக்கு அல்லாஹு சகல இடுக்கங்களிலிருந்து நிவாரணத்தையும், சகல துயரங்களிலிருந்து மனமகிழ்ச்சியையும் ஆக்கி அவர் நினைக்காத விதம் அவருக்கு இரணம் அளிக்கிறான்.

25. கிரியைகளில் அல்லாஹ் மீது மிகப்பிரியமானது நிரந்தரமாகச் செய்யப் படக்கூடிய கிரியையாகும். அது குறைவாக விருப்பினும் சரியே.

26. "சகல பாவங்களையும் அல்லாஹு மன்னித்து விடலாம். ஆனால் இணை வைப்பவராக மரிப்பவரையும், உண்மை விசுவாசியைக் கொன்றவரையும் தவிர."

27. நிச்சயமாக அல்லாஹு நியாயம் தவறாமல் நீதி செலுத்தும் நீதிமானுடன் இருக்கின்றான். அவர் எப்போது நியாயம் தவறிவிடுகின்றாரோ அப்போது அவரை விட்டு அவன் நீங்கி விடுகின்றான் (மாறாக) சாத்தான் அவரைப் பற்றிக் கொள்கின்றான்.

28. மூன்று வகுப்பினர் (மறுமையில்) என்னுடைய முகத்தைப் பார்க்க மாட்டார்கள் (1) பெற்றவர்களுக்கு நோவினை செய்கின்றவர் (2) என்னுடைய ஸுன்னத்தைக் கை நழுவ விட்டு விடுகின்றவர் (3) என்னுடைய நாமம் சொல்லப்படும் இடத்து என் மீது ஸலவாத்துக் கூறாதிருக்கின்றவர்.

29. (1) வம்சத்தைக் குறித்து பெருமை பேசுதல் (2) வம்சத்தைக் குறித்து குத்தல் பேச்சு பேசுதல் (3) கிரகபலன் நாள் நட்சத்திரம் சகுனம் இவற்றில் விசுவாசம் கொள்ளல் 4)இறந்தவர்க்காக மார் அடித்து ஒப்பாரி வைத்தல் ஆக இந் நான்கும் அறியாமைக் காலத்தவர்களின் அறியாச் செயல்களில நின்றுள்ளவை.

30. பட்டினங்களில் அல்லாஹ்விடம் மிகப் பிரியமான பகுதிகள் அவற்றின் மஸ்ஜிதுகளாகும். பட்டினங்களில் அல்லாஹ்விடம் மிக வெறுப்பான பகுதிகள் அவற்றின் கடை பஜார்களாகும்.

31. அல்லாஹ் சகல சிருஷ்டிகளையும் படைத்தான் அல்லாஹ்வைப் படைத்தவன் யார்? என்று கேட்கப் படும் வரை ஜனங்கள் கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருப்பர், எனவே எவர் இதிலிருந்து எதையாவது காண்பாராயின் நான் அல்லாஹ் மீதும் அவன் தன் தூதர்கள் மீதும் விசுவாசம் கொண்டேன் என்று அவர் கூறிவிடுவாராக.

32. எவர் இருநூறு தடவை 'குல் ஹுவல்லாஹு அஹதுன், சூறாவை ஓதுகின்றாரோ அவருக்கு ஐம்பதாண்டுப் பாவங்கள் நீக்கப்படும். ஆனால், அவர்மீது கடன் இருந்தால் கூடாது.

33. என்னுடைய உம்மத்தவர்கள் மீது ஒரு காலம் வரப்போகிறது அந்தக் காலத்தில் அன்னவர்களுடைய அதிகாரிகள் அட்டூழியம் செய்வதிலும், அறிஞர்கள் பேராசையிலும், வணக்கஸ்தர்கள் முகஸ்துதியிலும், வணிகர்கள் வட்டியிலும் பெண்கள் உலக அலங்காரத்திலும் மூழ்கி இருப்பார்கள்.

34 நான்கு நபர்களை அல்லாஹ் சொர்க்கம் புகச் செய்யமாட்டான் அவர்களாவது 1) மது அருந்துவோன் 2) அனாதையுடைய பொருளை அபகரிப்போன் 3) வட்டி வாங்குவோன் 4) தாய் தந்தையரை நோவினை செய்வோன் ஆகியோர்களாகும்.

35. எவர் அல்லாஹ் மீதும் இறுதி நாள் மீதும் விசுவாசங்கொண்டவராக இருக்கின்றாரோ அவர், மது அருந்தப்படுகின்ற உணவுப் பந்தியில் அமர மாட்டார்.

36. ஒரு அடியான் விபச்சாரம் செய்வாரானால், அல்லது மது அருந்துவாரானால், அவருடைய தலையிலிருந்து அவர் சட்டையைக் கழற்றுவது போன்று, அல்லாஹ் அவரிலிருந்து ஈமானைக் கழற்றி விடுகிறான்.

37. நீங்கள் என்மீது அதிகப்படியாக ஸலவாத்து ஓதுங்கள்! ஏனெனில் அது சிக்கல்களை அவிழ்த்து, துன்பம் துயரங்களை அகற்றும்.

38. "எவர் அல்லாஹ்வை அவன் அவரைப்பற்றி திருப்தியடையும் நிலையில் மறுமை நாளன்று சந்திக்க விரும்புகின்றாரோ அவர், என்மீது அதிகப்படியான ஸலவாத்துக்களை ஓதிக் கொள்ளவும்.

39. எவர் என்மீது நூறு ஸலவாத்து ஓதுவாரோ அவரின் நூறு தேவைகள் நிறைவேற்றப் படுகின்றன அதில் முப்பது இம்மையிலும் மற்றையது மறுமையிலுமாகும்.

40. எவர் தினசரி " லாயிலாக இல்லல்லாஹு௱ல் மலிக்குல் ஹக்குல் முபீன்" என்று நூறு தடவை ஓதுகின்ருரோ அது வறுமையை விட்டுப் பாதுகாப்பாகவும் கப்றின் வெருட்சியை விட்டு மிருதுவாகவும் ஆகிறது மேலும் சொர்க்க வாசல்களும் திறக்கப்படுகின்றன. மேலும் சகல கஸ்டங்களும் நீங்கப் பெற்று இரண பாக்கியமும் கிடைக்கும்.

41. எவர், 'அஸ்தஃபிறுல் லாஹல்லதீ லாஇலாஹ இல்லாஹு௱வல் ஹையுல் ஹையூம் வஅத்தூபு இலைஹி' (நித்திய ஜீவனுள்ள அல்லாஹ்விடம் நான் பாவமன்னிப்புக் கோருகிறேன்) என ஓதுகின்றவர்களுக்கு பாவமன்னிப்பு அளிக்கப்படும். (அவர் யுத்த களத்தில் புறமுதுகு காட்டி ஓடியவராஞலும் சரியே.)

42. நிச்சயமாக, அல்லாஹ் தவ்பாவுக்காக அஸ்தகிரியில் ஒரு வாசலை ஏற்படுத்தியுள்ளான். அதன் விசாலம் எழுபதாண்டு தொலைதூரமாகும். எனவே அதன் திக்கிலிருந்து கதிரவன் உதிக்கும்வரை அந்த வாசல் அடைக்கப்படமாட்டா.

43. மரணவேளை உயிர் தொண்டையை அடைக்காதிருக்கும் வேளைவரை, நிச்சயமாக அல்லாஹ், ஒரு அடியானின் தவ்பாவை ஏற்றுக் கொள்கிருன்.

44. "ஸு௱ப்ஹானல்லாஹ்" என்பது படைப்பினங்களின் வழிபாடு 'அல்ஹம் துலில்லாஹ்' என்பது நன்றியுரை லாஇலாஹ் இல்லல்லாஹு௱ என்பது கலப்பற்ற ஏகத்துவக்கலிமா, அல்லாஹு௱ அக்பர் என்பது விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே உள்ள தொலையளவு நிரம்பிய றஹ்மத் லாஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹி என்று கூறுவாராயின் அவன் எனக்கு வழிபட்டு சரண் அடைந்துவிட்டான். (என அல்லாஹ் கூறுகிருன்.)

45. ஹாமீம்துகான் ஸு௱ருவை வெள்ளிக்கிழமை இரவில் ஓதுவாராயின் அவருடைய பாவம் மன்னிக்கப்படுகிறது.

46. பகலின் மத்தியில் யாஸீன் சூருவை ஓதுகிறவருடைய தேவைகள் தீர்க்கப் படுகின்றன.

47: அல்லாஹ்வின் திருமுகத்தை நாடியவராக யார் யாஸீன் ஸூறுவை ஓதுகின்றுரோ அவருக்கு, அவருடைய முன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன ஆதலால் உங்களில் மரித்தவர்களுக்காக அல்லது மரிக்கின்றவர்களுக்காக நீங்கள் அதனை ஓதுங்கள்.

48. ஒவ்வொரு இரவிலும் 'அல்வாக்கிஆ' ஸூறுவை ஓதி வருகின்றவர்களுக்கு வறுமை அணுக மாட்டாது.

49. ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு இதயமுண்டு திருக்குர்ஆனின் இதயம் யாஸீன் சூறுவாகும் எவர் யாஸீன் ஸூறுவை ஓதுகிறுரோ அவருக்கு, அதனை ஓதுகின்ற காரணத்தினுல், திருக்குர்ஆனை பத்துத்தடவை ஓதுகின்ற நன்மையை அல்லாஹ் பதிவு செய்து விடுகின்றுன்.

50. எவர் 'ஹாமீம்துகான்' ஸூறுவை ஒரு இரவில் ஓதுவராயின் அவருக்காக எழுபதாயிரம் வானவர்கள் பாவமன்னிப்புத் தேடியவர்களாக அவர் விடிந்தெழுகிறுர்.

51. ஜூம்மா நாளன்று 'கஹ்பு' ஸூறுவை ஓதுகின்றவருக்கு அதனை அடுத்த ஜூம்ஆ நாள்வரையுள்ள காலத்தை அது ஒளியாக்கி வைக்கும்.

52. ஜூம்ஆ நாளன்று ஆல இம்றுன் ஸூறுவை ஓதுகின்றவர் மீது அன்று இரவுவரை வானவர்கள் பாவமன்னிப்புத் தேடுகின்றனர்.

53. எவர் ஆஷூரு நாளன்று தம்முடைய குடும்பத்திற்கு தாராளமாக தம் பொருளிலிருந்து செலவு செய்கிறுரோ அவருக்கு அந்த ஆண்டு முழுவதும் அல்லாஹ் தன் கருணையிலிருந்து தாராளமாகக் கொடுக்கிறுன்.

54. எவர் அல்லாஹ்வுடைய அச்சத்தால் ஒருவருடைய உடம்பு சிலிர்த்து விடுமானுல் பட்டமரத்திலிருந்து காய்கள் உதிர்வது போல அவருடைய பாவங்கள் உதிர்ந்து விடுகின்றன.

55 ஒருவருடைய பாவங்கள் மிகைத்துவிட்டால், அவற்றிற்குப் பரிகாரமாக்கி வைக்கக்கூடிய அளவிற்கு அவரிடம் நன்மையில்லையானுல் அல்லாஹ் அவரை மனக்கவலை கொண்டு சோதிப்பான்.

56. நோய் அணுகுவதற்கு முன் தர்மம் செய்வதில் விரைந்து

கொள்ளுங்கள் ஏனெனில் நோயானது தர்மத்தை நிச்சயம் கடக்கமாட்டாது.

57. ஒருவருக்கொருவர் ஸலாம் சொல்லிக்கொள்வதை அதிகப் படுத்திக்கொள்ளுங்கள் உண்ண உணவளியுங்கள். பந்துக் களை இணைந்துகொள்ளுங்கள். மனிதர்கள் தூங்கும்வேளை இரவில் கண்விழித்துத் தொழுங்கள் சாந்தியுடன் நீங்கள் சொர்க்கம் செல்வீர்கள்.

58. அல்லாஹ்வின் நாமம் கூறப்படாத உணவை (அதனை உண்ணு மிடத்து) சைத்தான் தனக்கும் ஆகுமாக்கிக் கொள்கிறான்.

59. ஒரே மூச்சில் தண்ணீர் குடிப்பதையும், தண்ணீரில் மூச்சு விட்டுக் குடிப்பதையும், வாயால் ஊதிச் சாப்பிடுவதையும் தவிர்ந்து கொள்ளுங்கள்.

60. அல்லாஹ்மீதும், இறுதிநாள் மீதும் விசுவாசம் கொள்கின் றவர் எவரோ அவர் தம் விருந்தினர்களைக் கண்ணியப்படுத் துவாராக.

61, கடன் - மோசடி, கர்வம் ஆக இம் மூன்றையும் விட்டு நீங் கியவராக எவர் மரிக்கிறாரோ அவர் சொர்க்கம் புகுவார்.

62. தீய நண்பனைவிட தனித்திருப்பது நன்று தனித்திருப்பதை விட நல்ல நண்பன் நன்று.

63. மறுமையில் ஒரு மனிதனுடைய தராசில் வைக்கப் படும் கிரியைகளில் மிகப் பளுவானது அவரது நற்குணமாகும் நிற்சயமாக, துர்க்குணம் உடையவரை அல்லாஹ் வெறுக் கின்றான்.

64. தனது கரத்தால் உழைத்துண்ணும் உணவானது அவரைச் சொர்க்கம் புக வைக்கும்.

65. தர்மம் செய்துவிட்டு அதைப் புகழாகச் சொல்வோர் சொர்க் கம் புக மாட்டார்கள்.

66. தர்மவான் அல்லாவிற்கு நெருங்கியவன், மனிதர்களுக்கு நெருங்கியவன் நரகத்திற்குத் தூரமானவன்.

67. இடக்கரமறியாமல் வலக்கரத்தால் தர்மம் செய்வோர் அல் லாஹ்வின் அன்புக்குப் பாத்திரமாகின்றனர்.

68. தன் அயலார் பசித்திருக்க, தம் வயிற்றை நிரப்புவோர் உண்மை விசுவாசியல்லர்.

69. போதும் என்ற மனப்பான்மை தீராத செல்வம் அழியாத புதையல்.

70. ஹறுமான உணவை உண்ட ஓர் உடல் சொர்க்கம் புக மாட்டாது அதற்கு ஏற்ற இடம் நரகமேயாகும்.

71. ஒருவர் ஒரு பொருளை மனமிசைந்து உமக்குக் கொடுக்கா தவரை அதை நீர் பெறுதல் கூடாது.

72. குறைவான உணவால் திருப்தியுறுவோரை அவரின் குறை வான நற்செய்கையைக் கண்டும் அல்லாஹ் திருப்தியடை கிறான்.

73. தர்மத்தினால் பொருள் குறைந்துவிடாது, மன்னிப்பதினால் சிறப்புக் குறைந்துவிடாது, தாழ்மையினால் உயர்வு குறை ந்துவிடாது.

74. லஞ்சம் வாங்கின்றவர்களும், கொடுக்கின்றவர்களும் அல் லாஹ்வின் சாபத்திற்கு இலக்காகின்றனர்.

75. குழந்தை பிறந்ததும் அதன் வலச் செவியில் பாங்கும் இடச் செவியில் இகாமத்தும் சொல்வதனால் சாத்தானுடைய தீங்கு களைவிட்டு அக்குழந்தை காப்பாற்றப்படுகிறது.

76 குழந்தை பிறந்து கண்விழித்துப் பார்க்கும்போது அதற்கு குர்ஆனைக் காட்டவும்.

77. ஒருவருக்கு பெண் மகவு பிறந்தால் அதனை இழிவாகக் கருதவேண்டாம். பெண் மகவிற்காகப் பொருள் தேடுபவரை அல்லாஹ் சொர்க்கம் புகச்செய்கிறான்.

78. குழந்தை பிறந்ததும் அக் குழந்தைக்கு நற் பெயரிட்டு நல்லொழுக்கத்தை கற்பித்து பிராயவயதை அடைந்தால் மணம் செய்து வைத்தல் பெற்றோரின் கட்டாயக் கடமையா கும்.

79. நீங்கள் திருமணம் செய்து குழந்தைகள் பெறுவது உங்கள் மீது கடமையாகப்பட்டுள்ளது.

80. ஆண் பிள்ளைகள் பிறந்தால் கொண்டாடுவதும் பெண் பிள்ளைகள் பிறந்தால் துக்கமடைவது எமது சமுதாயத்தில் அழிக்கப்பட வேண்டியதொன்ருகும்.

81. "அநீதம் செய்வதை நான் எனதளவில் ஹறுமாக்கி விட்டேன் அதனை உங்கள் பாலும் ஹறுமாக்கி இருக்கிறேன் ஆகவே நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதம் (அநியாயம்) செய்யவேண்டாம்!" என்று அல்லாஹ் கூறுகிருன்.

82. அக்கிரமக்காரன் என்று அறிந்தும் தெரிந்தும் கொண்டே அவனுக்கு துணையாக நின்று உதவி செய்வதற்காக எவர் அவனுடன் செல்கின்ருரோ அவர் இஸ்லாத்தை விட்டு நீங்கிவிடுகின்ருர்.

83. நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவிடுங்கள் உங்கள் கரங்களால் நீங்களே அழிவில் போட்டுக் கொள்ளாதீர்கள் அன்றி செலவினங்களை பயனுள்ள முறையில் செலவிடுங்கள் நிச்சயமாக அல்லாஹ் பரோபகாரிகளை நேசிக்கிருன்.

84. கணவனில்லாத பெண்ணுக்கு உதவுபவர்களும், ஏழைகள் நலனுக்காக முயற்சி செய்பவர்களும் அல்லாஹ்வின் பாதையில் முயற்சிசெய்தவர் போன்றவராவார்.

85. ஒருவர் தனது முஸ்லிம் சகோதரரின் உலகத் தேவைகளில் ஒன்றை பூர்த்தி செய்வாராயின் அல்லாஹ் அவரின் எழுபது தேவைகளைப் பூர்த்தி செய்து தருவான்.

86. தர்மம் செய்வதால் பொருள் அதிகரிக்கிறது.

87. அல்லாஹ்வை இரட்சகனுகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மதை நபியாகவும் ஏற்றுக் கொண்டவர் ஈமானின் சுவையை அனுபவித்து விடுகிருர்.

88. உண்மையைக் கூறிவிடு அது கசப்பானதாக இருந்தாலும் சரியே.

89. நீர் நெடுங்காலம் வாழப்போகிறவர் போல இவ்வுலகக் காரியங்களில் ஈடுபடுவீராக. ஆனுல் நாளையே மாணிக்கின்றவர் போல மறுமை உலகின் காரியங்களிலும் ஈடுபடுவீராக.

90. நீங்கள் கொல்லப்பட்டாலும் தீயிலிட்டு பொசுக்கப்பட்டாலும் இறைவனுக்கு இணை வைக்காதீர்கள்.

91. மனைவி மக்கள் அனைவரையும் விட்டுவிட உத்தரவிட்டாலும் பொருளனைத்தையும் துறந்துவிட ஆணையிட்டாலும் பெற்ற தாய் தந்தையர்க்கு மாறு செய்யாதீர்கள்

92. ''வட்டிப் பொருளென்று அறிந்தும் ஒரு மனிதன் உண்ணக் கூடிய ஒரு திர்ஹம் அளவு வட்டிப் பொருள், முப்பத்தாறு விபச்சாரங்களைவிட மிகக் கொடியதாகும்.''

93. வட்டி உண்ணுவதன் குற்றம் எழுபது பிரிவுகளாகும் அவற்றுள் மிக லேசானது, ஒரு மனிதன் தன்னுடைய தாயைக் கற்பழித்தல் போன்றதாகும் - (அத்தகைய இழிச்செயலைப் போன்றதாகும்.)

94. வட்டி (முதல்) உண்பவர், அதனை உண்ண வைக்கின்றவர் அதனை எழுதிக் கணக்கு வைக்கின்றவர் அதனை பெற உதவுகிறவர் ஆகியோருக்கு சுவனமில்லை
வட்டி இவ்வுலகில் ஆக்கப்படுகிறது மறு உலகில் அழிக்கப் படுகிறது.

95. ஹலாலாக சம்பாதித்த ஒரு பொருளிலிருந்து ஒரு பேரீத்தம் பழத்தையேனும் தர்மம் செய்கின்றவர் நிச்சயமாக அல்லாஹ்வின் பாதையில் இருக்கின்றூர்.

96. இரண்டு கண்களை நரக நெருப்பு தீண்டமாட்டாது 1) அல்லாஹ்வுடைய அச்சத்தால் அழுத கண் 2) அல்லாஹ்வின் பாதையில் விழித்திருந்து காவல்காத்த கண்.

97. விண்ணுக்கும், மண்ணுக்குமிடையே அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் நோன்பு ஸதக்கா பித்ராவைக் கொண்டேயல்லாது உயர்த்தப்படமாட்டாது.

98. எவர் கல்வியறிவைத் தேடச்சென்று அதனைப் பெற்றுக்கொள்கின்றூரோ அவருக்கு இரண்டு கூலிகள் கிடைக்கப்பெறுகின்றன 1) அதனைத் தேடச்சென்ற கூலி, 2) அதனைப் பெற்றுக் கொள்கின்ற கூலி.

99. ஆனால் அவர் கல்வியறிவைத் தேடிச்சென்றும் கல்வியறிவைப் பெறவில்லையானல் தேடிச்சென்ற கூலி மாத்திரமே கிடைக்கப் பெறுகிறது.

100. கல்விக்கு ஆபத்து மறதியாகும் தகுதியற்றவர்களிடம் அது

அதுபற்றி உரையாடுவது கல்வியை ஈனப்படுத்துவதாகும்.

101. அல்லாஹ்வின் வேதத்தைக் கற்று அதன்படி நடக்கிறவர் மறுமையில் கொடிய கேள்வி கணக்கிலிருந்து காப்பாற்றப் படுகிறார்.

102. ஒரு பெண் தனது கணவனின் திருப்தியைப் பெற்றவளாக இறப்பாளானால் அவள் சொர்க்கம் புகுவாள்.

103. ஒருபெண் கணவனோடு கோபித்துக் கொண்டு ஒரு இரவைக் கழிப்பாளானால் அவளை அந்த இரவு முழுவதும் வானவர்கள் சபிப்பார்கள்.

104. இருவருடைய தொழுகை அல்லாஹ்விடம் ஏற்றம் பெறுவதில்லை (1) தன் எஜமானிடமிருந்து தப்பி ஓடும் அடிமை (2) கணவனுக்குக் கீழ்ப்படியாத மனைவி.

105. தன்னுடைய கணவனின் கடமைகளை நிறைவேற்றாத மனைவி அல்லாஹ்வின் கடமைகளையும் நிறைவேற்றாதவளாவாள்

106. தொழுது கொண்டிருக்கும் போது பேசுவது தடை செய்யப்பட்டுள்ளது.

107. வறுமையைக் கண்டு பயப்படும் அளவிற்கு நரகை நினைத்து கவலைப்படுவானானால் அவன் சொர்க்கம் அடைவான்.

108. நாவை அடக்கி குற்றங்களை நினைத்து அழுவானானால் ஒருவனுக்கு விமோசனம் கிடைக்கும்.

109. நம்மில் பெரியவர்க்கு மரியாதை புரியாதவனும் நம்மில் சிறியவர் பால் இரக்கங் காட்டாதவனும் நமது உலமாக்களை மதிக்காதவனும் எனது உம்மத்தை சேர்ந்தவன் அல்லன்

110. கியாமத்து நாளில் மனிதர்களுடைய அமல்களில் முதன் முதலாக தொழுகையைப் பற்றியேதான் கேள்வி கணக்கு கேட்கப்படும்.

111. திருக்குர் ஆனை ஓதுங்கள் அதனை மனப்பாடம் செய்யுங்கள் திருக்குர்ஆன் உள்ள இதயத்தை நெருப்பு தீண்டமாட்டாது.

112. எவர் குர்ஆனை அதிகம் ஓதுகிறாரோ அவரின் பெற்றோரின்

தலையில் கிரீடம் அணிவிக்கப்படும். அதன் பிரகாசம் சூரியனைவிட நேர்த்தியானதாகும்.

113. ஒரு மணிநேரம் அல்லாஹவைப் பற்றிச் சிந்திப்பது 8 ஆண்டுகள் வணங்குவதைவிடச் சிறந்ததாகும்.

114. ஸகாத்தை நிறைவேற்றுபவர், விருந்தினர்களை உபசரிப்பவர் துன்பப்படும் மக்களுக்கு உதவுபவர் ஆகிய மூவரும் தீய குணத்திலிருந்து தப்பியவர்களாவார்கள்.

115. எவருக்கு ஆகாரமளிப்பது தன்மீது கடமையோ அத்தகையவரைக் கவனிக்காமல் விடுவதே ஒருவரின் பாவத்திற்கு மிக அதிகமாகும்.

116. ஒருவர் தனது ஜீவிய காலத்தில் ஒரு திர்ஹம் தர்மஞ்செய்வதானது மரணத் தருவாயில் நூறு திர்ஹம் செலவிடுவதைவிட மேலானது.

117. தர்மம் செய்வதற்கு முன் வருவீர்களாக. நிச்சயமாக துன்பம் தர்மத்தைத் தாண்டிச் செல்லாது.

118 தர்மம் மரணத்தருவாயில் ஷைத்தானின் ஊசாட்டத்தை விட்டுக் காப்பாற்றுகிறது. திடீர் மரணத்தைத் தடுக்கிறது நல்ல முடிவு தருகிறது.

119. தர்மம் செய்வது பொருளைக் குறைத்துவிடாது. மன்னித்து விடுவது கண்ணியந்தரும். அல்லாஹ்விற்காக பணிந்து செல்பவரின் அந்தஸ்த்தை அல்லாஹ் உயர்த்தி வைக்கிறுன்

120. சொர்க்கம் நான்கு நபர்களை ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது 1)திருக்குர்ஆனை ஓதுகின்றவர் 2) தேவையற்ற வார்த்தைகளைப் பேசாமல் நாவைப் பேணிக்கொள்கின்றவர் 3) பசித்தவர்களுக்கு உணவு அளிப்பவர் 4) றம்ழான் மாதம் நோன்பு நோற்கின்றவர்.

121. தர்மம் பிணிகளை நீக்கி, தக்தீர் எனும் தலைவிதியை மாற்றி விடுகிறது.

22. ஒருவருக்கொருவர் புறம் கூறுதீர்கள் புறங்கூறுதல் சகோதரனின் இறைச்சியை (உடம்பைச்) சாப்பிடுவது போலாகும்.

123. உறக்கத்திலிருந்து எழும்பும்போதும், உறங்கப் போகுமுன்பும் யாராவது ஒருவர் லாயிலாக இல்லல்லாஹு என்று பேணுதலாகக் கூறிவருவாராயின் அவருக்கு இம்மையிலும் மறுமையிலும் பரக்கத் துண்டு.

124. ஈமானுக்கு எழுபதுக்கு மேற்பட்ட கிளைகள் உண்டு, அவற்றுள் முதன்மையானது லாயிலாக இல்லல்லாஹு என்று சொல்வது. மிகக் குறைவானது நடைபாதையில் இடையூறு செய்யும் பொருட்களை அகற்றுவது ஆகும்.

125. லாயிலாக இல்லல்லாஹு என்று மனதார உரைப்பவர்களுக்கு கப்ரிலும், மஹ்ஷர் வெளியிலும் வெருட்சி கிடையாது.

126. வானங்கள், பூமியிலுள்ள பொருட்கள் அத்தனையையும் ஒரு தட்டிலும், லாயிலாக இல்லல்லாஹு என்பதை மறுதட்டிலும் வைத்தால் கலிமாவின் தட்டே எடை கூடியதாயிருக்கும்.

127. அனைத்து ஜீவராசிகளுக்கும் உதவி செய்வதும் ஸதகாவாகும்.

128. எவரொருவர் அல்லாஹ்வின் பாதையில் செலவிடுகிருரோ அதற்குரிய நன்மையை உஹது மலையளவு இறைவன் பெருக்கி விடுகிருன்.

129. ஈமானில்லாத எந்த அமலும் ஈடேற்றம் பெறமாட்டாது.

130, பர்ளுத் தொழுகையை வேண்டுமென்றே விட்டுவிடுபவனை அல்லாஹுத்தஆலா அவனை விட்டும் பொறுப்பில்லாதவனுகிவிட்டான்.

131. கள் – சாராயம் போன்ற மதுபானங்கள் எல்லாப் பாவங்களுக்கும் அத்திவாரமாகும்.

132. தன்னுடைய குடும்பத்திற்கு தாராளமாகச் செலவு செய்பவரை அல்லாஹுத்தஆலா நேசிக்கிருன்.

133. சோம்பேறித்தனத்தால் தொழுகையை விடுவதும், பொய்ச் சத்தியம் செய்வதும் ஷைத்தானுக்கு மிகப்பிடித்தமானது.

134. நல்லனவற்றை ஏவுவதும் தீயவற்றை விளக்குவதும் ஒவ்

வெசன்றும் ஸுன்னத்தாகும்.

135. தீயகாரியங்கள் நடைபெறுவதைக் கண்டால் அதனைக் கையினுல் தடுக்கவேண்டும் முடியாவிட்டால் நாவினுல் தடுக்க முயலவேண்டும் அதுவும் முடியாதுபோனுல் மனதினுலாவது தீயது எனக் கருதி வெறுக்கவேண்டும்.

136. ஒரு முஸ்லிமின் குறைகளை ஒருவர் மறைத்தால் அல்லாஹ் அவருடைய குறைகளை துன்யாவிலும் ஆகிரத்திலும் மறைத்துவிடுகிருன்.

137. தனது சகோதரரைக் குறை கூறுபவர்களின் குறைகளை அல்லாஹ் பகிரங்கப்படுத்துகின்ருன்.

138. ஒரு முஸ்லிமின் மானத்திற்குப் பங்கம் விளைவிப்பதுவே வட்டிகளில் மிகக் கெட்டது.

139. உங்களது தோற்றங்களையோ, செல்வங்களையோ அல்லாஹ் பார்ப்பதில்லை மாருக உங்களது உள்ளங்களையும் அமல்களையுமே அவன் பார்க்கிருன்.

140. என்னைப் பின்பற்றி நடப்போர் சுவர்க்கம் புகுவார்கள்.

141. நரை மயிர்களுக்கு சாயம் பூசுகிறவர் சொர்க்கம் புகமாட்டார்.

142. போலி முடிகளை அணிகிறவளையும், பச்சைகுத்துகிறவளையும் அல்லாஹ் சாபமிடுகிருன்.

143. பெண் வேடம் பூண்ட ஆண்களையும், ஆண்வேடம் பூண்ட பெண்களையும் நான் சாபமிடுகிறேன் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறியுள்ளார்கள்

144. தவ்ஹீது கலிமாவை மொழிவதற்கு முடியாத நேரம் வருவதற்குமுன்னர் நீங்கள் அதிகமதிகம் அதனை ஓதிக்கொள்ளுங்கள்''

145. எந்த ஒரு அடியார் இரவு பகல் ஏதேனும் ஒரு நேரத்தில் தவ்ஹீத்துக் கலிமாவை ஓதுவாராயின், அவரது கிரியை ஏட்டிலிருந்து அவரது பாவங்கள் நீக்கப்பட்டுவிடுகின்றன அவற்றிற்குப் பதிலாக நன்மைகள் அதில் பதிவு செய்யப்படுகின்றன.

146. சொர்க்கத்தின் திறவுகோல் தொழுகையாகும். தொழுகையின் திறவுகோல் வுளுவாகும்.

147. வுளுஇல்லாத தொழுகையும், மோசடி செய்யப்பட்ட பொருளால் செய்யும் தர்மமும் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

148. கோபம் ஏற்படுமானல் உடனே வுளுச்செய்து கொள்ளவும்

149. நீங்கள் ஒருவருக்கொருவர் பொருமை கொள்ளாதீர்கள் ஒருவருக்கொருவர் கோபம் கொள்ளாதீர்கள் நீங்கள் ஒருவருக்கொருவர் புறம் கூருதீர்கள். அல்லாஹ்வின் அடியார்களே நீங்கள் யாவரும் ஏக சகோதரர்களாகி விடுங்கள்.

150. ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமுக்குச் சகோதரர் ஆவார் அவருக்கு அவர் அநீதம் செய்யமாட்டார் அவரை அவர் மோசம் செய்யமாட்டார். அவரை அவர் இழிவாகக் கருத மாட்டார். 'தக்வா' எனும் இறையச்சம் இங்குதான் என மும்முறை நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் நெஞ்சத்தைத் தொட்டுக் காட்டினுர்கள்.

நீர் உம்முடைய சகோதரருடன் (வீணே) தர்க்கித்துக் கொள்ளாதீர் அவரை பரிகசிக்காதீர் அவருக்கு எதையும் நீர் கொடுக்கப்போவதாக வாக்களித்து விட்டு மாறுசெய்து விடாதீர்கள்.

தூர இடங்களிலிருந்து அல்லாஹ்விற்காக நட்புக்கொள்ளும் இருவர் சொர்க்கத்தில் ஒன்ருக இருக்கக் காண்பார்கள்.

வஸ்ஸலாம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா அச்சகம்,
யாழ்ப்பாணம்.